**The Magic Stick Akbar Birbaal Story- மந்திர குச்சி – அக்பர் பீர்பால் கதை :**ஒருநாள் அக்பரோட அரசவைக்கு ஒரு வியாபாரி வந்தாரு



தன்னோட கடைல திருட்டு போய்டுச்சுன்னு சொன்னாரு ,அதுக்கு அரசர் நீங்க யார் மேலயாவது சந்தேக படுறீங்களானு கேட்டாரு

Tam...m



அதுக்கு அந்த வியாபாரி எங்கிட்ட நாலு வேலையாட்கள் இருக்காங்க ,அவனுங்க எல்லாரும் நல்லவங்க அவங்கமேல எனக்கு சந்தேகமே இல்ல



இருந்தாலும் அவனுங்களுக்கு மட்டும்தான் என்னோட பணம் எங்க இருக்குனு தெரியும்னு சொன்னாரு

உடனே பீர்பால் உடனே அவுங்க நாலு பேத்தயும் அரசவைக்கு கூட்டிட்டு வர சொன்னாரு



அவுங்க நாலு பேர்கிட்டயும் ஒவ்வோர் குச்சிய கொடுத்தாரு



இது மந்திர கோல் இந்த குச்சிய உங்களோட பக்கத்துல வச்சிக்கிட்டு

தூங்குங்க ,மறுநாள் இந்த குச்சி நாலு இன்ச் வளந்து இருந்தா நீங்கதான் திருடன்



அதனால் நாளைக்கு நீங்க எல்லோரும் இங்க வந்து உங்க குச்சிய காமிக்கனும்னு சொல்லி அனுப்பிச்சாரு

அதுல ஒரு திருடன் மட்டும் ரொம்ப பயந்து போய்ட்டான் ,வீட்டுக்கு வந்த அவன் ஒரு கத்திய எடுத்து அந்த குச்சில இருந்து நாலு இன்ச் வெட்டிட்டான்



மறுநாள் தைரியமா அரசவைக்கு
வந்தான் அந்த திருடன் ,

பீர்பால் அவுங்க கொண்டுவந்த குச்சி
எல்லாத்தையும் வாங்கி பாத்துட்டு
,சரியா அந்த திருடன மட்டும்
கண்டுபிடிச்சிட்டாரு



அரசர் கேட்டாரு உண்மையாவே அந்த குச்சி வளந்துதான் அந்த திருடன காட்டி கொடுத்துச்சானு கேட்டாரு



அதுக்கு பீர்பால் மந்திரம் தந்திரம் எதுவும் இல்லை அரசே ,அந்த திருடன் பயத்துல அந்த குச்சிய ஒடச்சிருந்தான் அத பாத்துதான் அந்த திருடன கண்டுபிடிச்சேன்னு சொன்னாரு

Tamil